செய்தி வெளியீட்டு எண்: 264 நாள்: 03.08.2021

**கொரோனா விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி மந்தைவெளியில் கொரோனா பெருந்தொற்றை தவிர்க்கும் நோக்கில் தொடர் கொரோனா விழிப்புணர்வு பிரச்சார வார விழாவினை முன்னிட்டு, மாவட்ட நிர்வாகம் மற்றும் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் நடைபெற்ற கொரோனா விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, அவர்கள் இன்று (03.08.2021) கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா பெருந்தொற்றை தவிர்க்கும் நோக்கில் தமிழ்நாடு முழுவதும் தமிழக அரசின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை 01.08.2021 முதல் 07.08.2021 வரை நடத்திட அறிவுறுத்தி, 31.07.2021 அன்று கொரோனா விழிப்புணர்வு வார விழாவினை தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 01.08.2021 அன்று கொரோனா விழிப்புணர்வு வாரத்தின் தொடக்கமாக விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக இன்று மாவட்ட நிர்வாகம் மற்றும் இந்திய மருத்துவ சங்கம் சார்பில் கல்லூரி மாணவ, மாணவிகள், செவிலியர்கள் மற்றும் தன்னார்வலர்களைக் கொண்டு கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார். இப்பேரணி மந்தைவெளியில் தொடங்கி கள்ளக்குறிச்சியில் உள்ள முக்கிய கடைவீதிகள், சாலைகள் வழியாக சென்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நிறைவு பெற்றது. இப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் கொரோனா தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள் ஏந்தியும், துண்டு பிரசுரங்களை வழங்கியும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இப்பேரணியில், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு.டி.என்.சதீஷ்குமார், நகராட்சி ஆணையாளர் திரு.என்.குமரன், இந்திய மருத்துவ சங்க மருத்துவர் மரு.மகுடமுடி, பொருளாளர் மரு.திருநாவுகரசு, மருத்துவர்கள் மரு.இளங்கோவன், மரு.குமார் மற்றும் மாணவ மாணவியர்கள், செவிலியர்கள், தன்னார்வளர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி.